# வேடர்களின் சடங்குகளும் வழிபாடும்: மட்டக்களப்பு வாகரைப் பிரதேச வேடர் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட இனவரைவியல் ஆய்வு.

# Rituals and Worship of the Veddas: An Ethnographic Study Based on the Veddas Community of Batticaloa Vakarai region.

Paheerathy Moses Dr. S. Srikanthan

## Abstract:

*Vagarai Veddas are recognized as archaic tribes whose identity is disappearing. Veddas have been living in Sri Lanka since prehistoric times. However, their cultural identities are undergoing rapid changes among the metamorphosing forces. However, rituals and related worship traditions occupy a prime position as a unique cultural symbol of Veddas social culture. In this case, this study aims to analyze the continuity and changes in rituals and religious worship traditions of Vakarai Pradesh Veddas. Rituals and worship are important cultural aspects of social life. Rituals and worship have become a form and culture that encompasses many elements of human society. Rituals and worship are seen as maintaining the heritage traditions and customs of the communities during the process of social change. Data for this study based on an ethnographic approach was collected through fieldwork in Vakarai area. All data collected were subjected to thematic analysis and discussed under appropriate subheadings. In this case, the primary issues such as the beliefs and worship of the Veddas community and their continuity and changes are discussed here in detail. It can be observed that ancestor worship and nature worship traditions continue in all aspects of the life of Veddas community of Vakarai region. However, changes in the worship traditions of the Veddas are taking place due to the government's settlements in the past, impacts due to the settlements, development projects, civil war, the resulting impacts, migrations of the Veddas, interactions with other communities, economic problems, change of period, etc. Through this research, it has been found that the traditions of worshiping gods based on Agama traditions are taking place, especially in combination with traditional worship traditions.*

**Key words:** Veddas, Primitive people, Rituals, Worship.

## அறிமுகம்:

'தொன்மைக்குடிகளுக்கென்று சில தனித்த பண்பாடு அடையாளங்கள் உண்டு. அவற்றின் அடிப்படையிலேயே ஒரு குடியினைத் தொன்மைகுடி எனக் குறிப்பிட வேண்டும்' என்று மானிடவியலாளர்கள் கூறுகின்றனர் (பக்தவத்சலபாரதி, 2012). இலங்கையில் வேடர்கள் இந்நாட்டின் தொன்மைக்குடியினர் ஆவர். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வேடர்களின் வரலாறு தொடர்கிறது. வரலாற்று

ஆய்வாளர்களின் தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது இலங்கைக்கு ஆரியர் வருகைதர முன்னரே இலங்கையின் தொன்மைக்குடியினரின் வரலாறு ஆரம்பிக்கிறது. இலங்கையில் வாழ்கின்ற தொன்மைக்குடியினரின் மரபும் தென்னிந்தியாவில் வாழ்கின்ற தொன்மைக்குடியினரின் மரபும் ஒத்துப் போவதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் ஆதாரங்களினூடாக நிரூபித்திருக்கிறார்கள். வரலாற்றுக் காலத்தில் வேடர் என்ற தொன்மைக்குடிகள் இந்தியாவில் தோன்றி அங்கிருந்து ஆபிரிக்கா, மடகஸ்கார், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு பரவியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக, ஆர்.எல்.ஸ்பிடன் என்ற வரலாற்று ஆசிரியர் வேடர் குலம் இன்று வேகமாக அழிந்து வருவதாக கூறுகிறார். *(https://berunews.wordpress.com/2014/08/17/)* இலங்கையில் அடையாளம் அழிந்து வரும் தொன்மைக்குடிகளாக வேடர்கள் இன்று இனங்காணப்படுகிறார்கள்.

சடங்குகள் மற்றும் வழிபாடுகள் சமூக வாழ்வில் முக்கியமான வடிவங்களாக ஒவ்வொரு பண்பாட்டிலும் பேசப்பட்டு வருகின்றன. மனித சமூகத்தின் வாழ்வியல் கூறுகள் பலவற்றையும் உள்ளடக்கிய வடிவமாக அவை நிலைகொண்டுள்ளன. சமூகங்கள் காலத்திற்குக் காலம் சமூக வளர்ச்சியில் மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து நாகரிக சமூகங்களாக மேம்பட்டுக்கொண்டாலும் சமுகங்களில் நிலைகொண்டுள்ள சடங்குகள் மற்றும் வழிபாடுகள் பல உயிர்ப்பான அம்சங்களை உள்ளடக்கிய வடிவங்களாகத் தொழிற்படுகின்றன. சமூக மாற்றச் செயற்பாட்டின் போது சமூகங்களின் பாரம்பரிய மரபுகளையும் வழக்காறுகளையும் தாங்கியவையாக சடங்குகள் மற்றும் வழிபாடுகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும். அவை கால ஓட்டத்தின் போக்குக்கமைய மாற்றமுறும் என்ற கருத்தியல் காணப்படுகிறது. எமது ஆய்வின் நோக்கத்திற்கேற்ப இலக்கிய மீளாய்வு செய்யப்பட்டபோது, இலங்கை தொன்மைக்குடிகளான வேடர் சமூகத்தின் சடங்குகள் மற்றும் வழிபாடுகள் இந்நிலைப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. ஆகவே, இக்கருத்தியலின் அடிப்படையில் வாகரை வேடர்களின் சடங்குகள் மற்றும் வழிபாடுகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. அவற்றில் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தொன்மை மக்களும் வேடர் சமூகமும், இலங்கையின் தொன்மை மக்களான வேடர் சமூகம், வேடர் சமூகத்தின் நம்பிக்கைகளும் சடங்குகளும் வழிபாடும், வேடர் சமூகத்தின் ஆரம்பகால நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள், வேடர் சமூகத்தில் காணப்படுகின்ற சடங்குகள், வழிபாடுகளின் நீட்சியும் மாற்றமும் ஆகிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்படுகின்றன.

**ஆய்வின் நோக்கம்:**

ஆய்வுப்பிரதேச தொன்மைச் சமூகமான வேடர் சமூகத்தின் தனித்துவமான சடங்குகள் மற்றும் வழிபாட்டு முறைகளை ஆராய்வதும், பின்காலனித்துவ சூழலில் இத்தொன்மைச்சமூகத்தின் சடங்கு மற்றும் வழிபாட்டு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் விளைவுகளையும் ஆராய்ந்தறிதலுமே பிரதான நோக்கமாகும்.

**இலக்கிய மீளாய்வு:**

இந்த ஆய்வானது தொன்மை இனக்குழு பற்றியதொரு ஆய்வாகும். அந்தவகையில் எமது ஆய்விற்கு துணையாக அமையும் பல நூல்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் வேடர்களின் பண்பாடு, சடங்குகள், வழிபாடுகள் தொடர்பான ஆய்வுகள் இங்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பகால தத்துவவாதிகள் மனிதர்களையும் அவர்களின் சமூகங்களையும் அறிய முற்பட்டதிலிருந்து மனித இனம், சமூகம், பண்பாடு பற்றிய தேடலும் புரிதலும் தொடங்கிவிட்டன. இத்தேடலைத் தொடக்கி வைத்தவர் கி.மு. 624-547 காலகட்டத்தில் வாழ்ந்த தாலஸ் ஆவார். அவரைத் தொடர்ந்து செனோபேன்ஸ், ஹெரோடாட்டஸ், டெமோகிரிட்டஸ், புரோட்டகோரஸ், சோக்கிரட்டிஸ், பிளட்டோ, அரிஸ்ரோட்டில், எபிகூரஸ் என தத்துவவாதிகளின் பட்டியல் தொடரும். இவர்கள் உலகின் பல இடங்களுக்கும் பயணம் செய்து பல்வேறு மக்கள் இனங்களை நேரில் கண்டு அவர்களுடைய வாழ்க்கை முறைகளைப்பற்றி பதிவு செய்துள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியுடன் இலங்கையின் தொல்குடிகள் பற்றி ஆய்வு செய்துள்ள இலக்கியங்களைப் பற்றி நோக்குவோம்.

Contributions to the Craniology of the people of the Empire of India , W.M.Turner, (1889) என்ற ஆய்வு இலங்கையின் தொன்மைக்குடிகளைப் பற்றிய ஆய்வுகளைச் செய்தவர்களைப்பற்றி கூறியுள்ளது. இந்த ஆய்வினை நோக்கும்போது சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல ஆய்வாளர்கள் இத்தொன்மைக் குடிகள் பற்றி ஆராய்ந்து எழுதியுள்ளமையை அறியமுடிகிறது. குறிப்பாக Robert knox, John Davy, D.Pridham, Sir Emerson Tennent, B.F.Hartshorne, John Bailey, C.S.V.Stevens, போன்றோரைப்பற்றி எழுதியுள்ளதைக் காணமுடிகிறது. இந்த ஆய்வில் மேற்சொன்னவர்களைப்பற்றி அதிகமாக எழுதியிருக்கிறார். இதனூடாக இலங்கையின் தொன்மைக்குடிகளைப் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்களைப்பற்றி அதிகமாக அறிய முடிகிறது.

An Historical Relation of the Island of Ceylon, (1681 - இலங்கைத் தீவின் ஒரு வரலாற்று உறவு) ரொபட் நொக்ஸ் (Robert Knox) என்பவரால் வெளியிடப்பட்ட இந்த ஆய்வில் இலங்கை வரலாற்றில் வாழ்ந்த தொன்மைக்குடியினர்களைப் பற்றி தெளிவுபடுத்தியுள்ளார். இக்குடியினர்களில் முக்கியமானதொரு இனக்குழுமமாக வேடர் இனத்தவர்களை குறிப்பிடுகிறார். இவர்களை வேடர் அல்லது வேடுவர் என தமிழிலும், வேடுவர் என்னும் பொருள்பட 'வெத்தா' என சிங்களத்திலும் இலங்கையர்கள் அழைக்கின்றனர் என்றும் இருந்த போதிலும், அவர்கள் தங்களை 'வன்னியலா எத்தோ' (Wanniyala-Aetto) என்றே குறிப்பிட்டுக் கொள்கின்றனர் என்றும் இதன் பொருள் 'காட்டைச் சேர்ந்தவர்கள்' அல்லது 'காட்டில் வாழ்பவர்கள்' அல்லது 'காட்டிலுள்ள மக்கள் என்பதாகும் என்றும் குறிப்பிடுவதோடு, அவர்கள் உயர்ந்த மலைகளிலும், காட்டுப்பகுதிகளிலும், சமவெளிகளிலும் வாழ்ந்துள்ளனர். சிலர் நாடோடிகளாகவும் வாழ்ந்துள்ளனர் எனவும் விளக்கியுள்ளார். இந்த ஆய்வு இலங்கை வேடர்கள் பற்றிய முதலாவது மேற்கத்தேய ஆய்வாக காணப்படுகிறது.

The Veddas (1911 - வேடர்கள்) செலிக்மன் (C. G. Seligman) என்பவரின் இந்த ஆய்வில் காடுகளிலும், குகைகளிலும் கண்டவை கேட்டவற்றை விஞ்ஞானபூர்வமான ஆய்வுக்குட்படுத்தியுள்ளார். வேடுவர்களின் இசையை பதிவு செய்திருக்கிறார். அவரால் பிடிக்கப்பட்ட புகைப்படங்களும், ஓவியங்களும், விளக்கப் படங்களும் அந்த நூலில் பல இடங்களில் காணக் கிடைக்கின்றன. அவ்வாய்வில் இலங்கை வேடர்களை மூன்று பிரிவினராக அவர் வகைப்படுத்தியிருக்கிறார். கிராமிய வேடர், கல் வேடர், கடல் வேடர் (கரையோர வேடர்) என அவை வரையறுக்கப்பட்டுள்ளன. கிராமிய வேடர் ஓரளவு வளர்ச்சியடைந்தவர்கள், காலபோக்கில் எல்லைப்புற கிராமங்களோடு ஓரளவு ஒன்று கலந்தவர்கள். கல் வேடர்களும், வேட்டை வேடர்களும் செறிவான காடுகளுக்குள் வாழ்பவர்கள். சற்று காட்டுமிராண்டித்தனமான குணமுடையவர்கள். கிராமிய மக்களிடம் இருந்து ஒதுங்கி தனித்து வாழ்ந்து வருபவர்கள் என்றும், கடல் வேடரை 'வெர்தாஸ்' (Veddas) என்றும் அழைக்கப்படுவதை செலிக்மன் விளக்கியுள்ளார். வேடரின் மொழி, நடனம், இசை, மருத்துவம், வாழ்வு முறை, உணவு, தற்காப்பு, தன்னிறைவு, சூழலியல் பற்றிய அவர்களின் கையாளுகை என அனைத்து விடயங்கள் குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார். மிகவும் வேகமாக அழிந்துவரும் வேடர் வகை என கடல் வேடுவரைக் குறிப்பிட்டுக் கூறியுள்ள அவர், வேடர்களுக்கும் தமிழ் சிங்கள மக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது பற்றிய ஆழமான ஆய்வு விபரங்களையும் முன்வைத்துள்ளார். அவர் ஆய்வு செய்தது ஒட்டுமொத்த

இலங்கையின் ஆதிவாசிகளை பற்றியதாக உள்ளபோதிலும் ஒரு தனியான அத்தியாயம் (12 வது) கிழக்கிலங்கை கடல் வேடர் பற்றியதாக உள்ளது. இலங்கையின் வேடர் பற்றிய விரிவான ஒரு ஆய்வாக இது காணப்படுகிறது. இதனை வேடர்கள் பற்றிய முன்னோடியான ஒரு மானிடவியல் ஆய்வாக கொள்ளமுடிகிறது.

The hybridization of the Veddas with the Sinhalese, (1963 - சிங்களவர்களுடன் வேடர்களின் கலப்பினமாக்கல்) டெரனியகலவின் (Deraniyagala, P. E. P.) இந்த ஆய்வில் வேடர் சமூகம் வரலாற்று ரீதியாக நன்கு ஆவணப்படுத்தப்பட்ட மிகவும் நிறுவப்பட்ட இனக்குழுக்களில் ஒன்றாகும், இருந்தபோதிலும் வரலாற்றுரீதியாக இலங்கையின் பன்மை அறிவுச் சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்படும் நிலை காணப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார். மேலும், இலங்கையின் பூர்வீக குடிகளான இவர்கள் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கும் கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் அவர்களின் வாழ்க்கை வழிமுறைகளை ஆவணப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார். வேடர் இனத்தின் சமூக மாற்றத்தினை வெளிக்கொண்டுவந்த ஒரு ஆய்வாக இதனைக் குறிப்பிடலாம்.

இலங்கை - இந்திய மானிடவியல் (2004), என்.சண்முகலிங்கன் மற்றும் பக்தவத்சலபாரதி ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள இந்த ஆய்வில் இலங்கை, இந்திய நாடுகளின் பண்பாடுகளுக்கிடையில் வரலாற்றுரீதியிலான ஒப்புமைகளை மானிடவியல் தளத்தில் மிகநுட்பமாக ஆராயப்பட்டுள்ளன. இந்நூலின் மூலம் இலங்கை, இந்திய நாடுகளைச் சார்ந்த தமிழர் பண்பாட்டின் சிறப்பியல்புகளை அறிய முடிகிறது. தொன்மைக்குடிகளான மலைப்பிரதேசத்து வேடர்கள் பற்றியும் அறிய முடிகின்றது. இலங்கை வேடர்களின் அடையாளங்களை வெளிக்கொண்டுவரும் முக்கியமானதொரு ஆய்வாக இதனைக் கொள்ள முடியும்.

கிழக்கு கடற்கரையின் வேடர்களிடையே இன அடையாளம் (1995 - Ethnic identity among the Veddas of the East Coast) என்ற யு.வி. தங்கராஜாவின் (Y.V.Thankaraja) இந்த ஆய்வானது கிழக்கின் கரையோரப் பிரதேசத்தில் வாழும் வேடர் சமூகத்தினரைப் பற்றியதாகக் காணப்படுகிறது. இச்சமூகத்தினரின் இன அடையாள அம்சங்கள் வாழ்க்கைச் சூழலுக்கேற்ப மாற்றமடைந்து செல்வதாகவும், உலக மாற்றத்திற்கேற்ப வாழ்க்கைமுறைகளும் பண்பாட்டு கூறுகளும் இயைபாக்கம் பெறுவதாகவும் அதனால் அவர்களின் இன அடையாளங்கள் அதற்கேற்ப மருவிச் செல்வதாகவும் கூறியுள்ளார். வாகரை வேடர்களின் சில தொன்மைகளை வெளிக்கொண்டுவரும் ஆய்வாக இதனைக் கூறலாம்.

மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம், (2005) என்ற வெல்லவூர்க்கோபாலின் இந்த ஆய்வு மட்டக்களப்பு வரலாற்றை விபரிக்கின்றது. இந்த ஆய்வில் இயக்கர் மற்றும் நாகர் வாழ்ந்த சில இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இயக்கர் குடியிருப்புகள் நாடு முழுக்கப் பரவியிருந்தமையும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் மாணிக்க கங்கை (கதிர்காமம்) மற்றும் விந்தனைப் பகுதிகளில் அவர்கள் பரவலாக வாழந்துள்ளமையும் தெரிகின்றது. நாகர்களின் இருக்கைகளாக மட்டக்களப்புப் பிரதேசத்து நாகர்பொக்கணை (மன்னம்பிட்டி), நாகர்முனை (திருக்கோவில்), நாகன்சாலை (மண்டூர்), சூரியத்துறை (மட்டக்களப்புப் பெருந்துறை) என்பனவும் குறிப்பிடப்படுகின்றன. இப்பிரதேசங்களில் அதிகமானவை வேடர் பிரதேசங்களாக காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஜேசேகரவின் (Nandadeva Wijesekara) 'மாற்றத்தில் வேடர்கள்' (Veddas in transition:1964) என்ற ஆய்வில் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தின் ஒரு பகுதியில் வேடர்கள் வசித்து வந்ததாகக் கூறியுள்ளார். வேடர்களின் மொழியை பற்றிய விடயங்களையும் பிரதானமாக கொண்டுள்ள இவ்வாய்வில் அவர்களது உண்மையான மொழியை டம்பானையில் (Dambana) உள்ள வேடர்களே பயன்படுத்துவதாகவும், அம்மொழியினை கரையோர மற்றும் அநுராதபுர பிரதேசங்களில் வாழும் வேடர்கள் தமது மத வழிபாட்டு மந்திரங்களுக்காகவும் வேட்டையாடுதலின் போதும் பயன்படுத்துகிறார்கள் என கூறியுள்ளார்.

விவேகா ஸ்டீக்போர்ன் (Wiveca Stegeborn), 'பழங்குடி மக்கள், இயற்கைப் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் - இலங்கையின் வேடர்களைப் பற்றிய ஒரு விடய ஆய்வு' (1977) (Indigenous People, Nature Conservation and Human Rights – A Case study of Veddas of Sri Lanka) என்ற தலைப்பில் வேடர் மற்றும் காலனித்துவ வேடர் குறித்து தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார். அவர் 1977ஆம் ஆண்டு முதல் வேடர்களுடன் வாழ்ந்து ஆய்வுகளின் ஊடாக பல விடயங்களை முன்வைத்துள்ளார். அவர் வெளியிட்ட ஆய்வில் காலனித்துவ வேடர்களின் அனைத்து சமூகவியல் அம்சங்கள் பற்றியும் ஒரு நீண்ட விவாதத்தை மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்வு காலனித்துவ வேடர்களின் சமூகப் பின்னணி குறித்த புரிதலைப் பெற உதவும்

**ஆய்வு இடைவெளி:**

வாகரை வேடர்களின் சடங்குகள் மற்றும் வழிபாடுகள் பற்றிய ஆய்வுகளும் அவற்றின் ஆவணப்படுத்தல்களும் அவசியமானதாக உள்ளது. இலங்கையின் தொன்மை மக்களான இவர்களது வாழ்வியல் கூறுகள் அனைத்தும் பேணப்படவேண்டிய தேவை உள்ளது. 1911ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் செலிக்மன் தம்பதியினரால் வெளியிடப்பட்ட 'வேடர்' என்ற ஆய்வுக்கு பின்னர் அவ்வாறான முயற்சிகள் இடம்பெறவில்லை. பின்னைய காலங்களில் சிற்சிறு கட்டுரைகள் சில எழுதப்பட்டுள்ள போதிலும் இவை பற்றி வரன்முறைப்பட்ட ஆய்வுகள் எவையும் செய்யப்படவில்லை. அதனால் இவ்விடயங்கள் சார்ந்த ஆய்வுகளுக்கான இடைவெளி காணப்படுகிறது. அதனை நிவர்த்தி செய்யும் வகையிலான ஆய்வுகளுக்கான தேவையும் எழுந்துள்ளது. அதற்கமைய 'வேடர்களின் சடங்குகளும் வழிபாடும்: மட்டக்களப்பு வாகரைப் பிரதேச வேடர் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட இனவரைவியல் ஆய்வு' என்ற எமது இந்த ஆய்வு குறித்த விடயப்பரப்பின் ஆய்வு இடைவெளியை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

**ஆய்வு முறையியல்**

புராதன சமூகத்தில் இருந்து இன்றைய சமூக வாழ்வியல் வரை சடங்குகள் மற்றும் வழிபாடுகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. எமது ஆய்வானது வாகரைப்பிரதேசத்தில் வாழ்ந்துவரும் தொன்மைக்குடிகளான வேடர்கள் பற்றியதாகும். ஆய்வின் நோக்கத்திற்கேற்ப கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தரவுகளும் தகவல்களும் பெறப்பட்டன. அத்தரவுகளின் உண்மைத்தன்மை மற்றும் மேலதிக தகவல்களைப் பெறுவதற்கும் இரண்டாம்நிலைத் தரவுகள் தேடிப்பெறப்பட்டன. வாகரை வேடர்களின் சடங்குகள் மற்றும் வழிபாடுகள் தொடர்பான நேரடி அவதானிப்பு தகவல் வழங்கிகளுடனான கட்டமைக்கப்படாத நேர்காணல், குழுநிலைக் கலந்துரையாடல் என்பன தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

**ஆய்வின் முடிவுகளும், கலந்துரையாடலும்:**

ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தொன்மை மக்களும் வேடர் சமூகமும், இலங்கையின் தொன்மை மக்களான வேடர் சமூகம், வேடர் சமூகத்தின் நம்பிக்கைகளும் சடங்குகளும் வழிபாடும், வேடர் சமூகத்தின் ஆரம்பகால

நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள், வேடர் சமூகத்தில் காணப்படுகின்ற சடங்குகள், வழிபாடுகளின் நீட்சியும் மாற்றமும் ஆகிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்படுகின்றன.

**தொன்மை மக்களின் சடங்கும் வழிபாடும்**

தொன்மைமக்களை தமிழில் தொன்மை மக்கள், பூர்வக்குடிகள், ஆதிக்குடிகள், பழங்குடிகள், தொல்குடிகள், எழுத்தறிவிற்கு முன்னைய சமூகம் என வெவ்வேறுபட்ட பெயர்களில் குறிப்பிடுகின்றனர். உலகப் புகழ்பெற்ற அகராதிகள் தொன்மை மக்களை வெவ்வேறு வகையில் வரையறை செய்கின்றன. தொன்மை மக்கள் என்பது கைத்தொழிலோ அல்லது எழுத்து அமைப்போ இல்லாமல் மிகவும் எளிமையான வழியில் வாழுகின்ற மக்களை குறிக்கின்றது. ஒவ்வொரு பண்பாட்டுப் பிராந்தியங்களும் தத்தமது தொன்மை மக்களைக் குறித்துரைக்க தனித்துவமான பெயர்களைப் பயன்படுத்தி வருகின்றன. இன்று உலக மொத்த சனத்தொகையில் நான்கு வீதமாக காணப்படும் இவர்கள் உலகளாவிய ரீதியில் எழுபது நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தமாக முப்பது கோடி மக்களுக்கு மேல் வாழும் இவர்கள் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகளை உபயோகிப்பதாகவும் அறியமுடிகிறது.

மனிதனின் தொல்குடி வாழ்க்கை முறையிலிருந்தும் வளர்ந்து வரும் மாற்றங்களைக் கண்டும் வாழ்வை நெறிப்படுத்திக் கொண்டவர்கள் பழங்குடிகளான தொன்மைமக்கள். இவர்கள் வாழும் இடங்களை மையப்படுத்திச் சூழ்நிலைக்கு ஏற்ப இவர்களின் வாழ்க்கை முறைகளும் பண்பாடும் காணப்படுகிறது. பரிமேலழகர் தொன்மைக்குடி என்னும் சொல்லுக்குத் 'தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார்' எனப்பொருள் தருகிறார். (பு. இராசதுரை, உறவின் முறை, ப.49.) க.கைலாசபதி 'சுருக்கமாகக் கூறின் நாகரிகமற்ற ஆதிகால மக்களுக்கும் நாகரிக வளர்ச்சியின் உச்ச நிலையை எட்டிவிட்ட தற்கால மக்களுக்கும் இடையே ஓர் பாலம் போல அமைபவர்கள் பழங்குடிகள் என்று கூறலாம்' எனக்கூறுகிறார். (கா. அப்பாதுரை, லெமூரியா (அ) குமரிக்கண்டம், ப.29.) பக்தவத்சலபாரதி 'உலகளாவிய நிலையில் மனித சமூகங்கள், பண்பாடுகள் உருவாக்கியுள்ள வேறுபாடுகளை எல்லாம் உள்ளடக்கி மனிதச் சமூகத்தின் உள்ளார்ந்த போக்குகளை அறிவது மானிடவியலின் மற்றொரு முக்கிய இலக்காகும். இத்தகு போக்குகளை ஆராய்வதில் தமிழ் மண்ணின் பூர்வக்குடிகளின் பதிவுகள் மிக இன்றியமையாதவை' எனக்கூறுகிறார். (பக்தவத்சல பாரதி தமிழக பழங்குடிகள் ப.1.) எனவே

பழங்குடிகளை இனங்காண்பதற்குச் சில அளவு கோல்கள் முன்வைக்கப்பட்டன. அவர்கள் பழங்குடித் தோற்றம் கொண்டவர்களாகவும் பூகோள ரீதியாகத் தனித்தொதுங்கிய வாழ்விடத்தைக் கொண்டவர்களாகவும் தனித்துவமான பண்பாடு, மொழி கொண்டவர்களாகவும் இருப்பது முக்கியப் பண்புகளாகக் கொள்ளப்பட்டன.

தொன்மைக்குடிகளில் ‘வேடர்’ என்ற பெயரிலான மக்கள் சமூகம் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்கின்றனர். வேடர் எனப்படுவோர் காடுகளில் வேட்டையாடி வாழும் வாழ்க்கையை பழக்கமாகக் கொண்டு வாழும் மனிதர்களாவர். சாதாரண மனிதர்களின் வாழ்க்கைக்கு பண்படாதவர்களாக காணப்பட்டாலும், அண்மைக் காலமாக சாதாரண மனிதவாழ்க்கை முறைக்கு தம்மை மாற்றிக்கொண்டு, ஏனைய சமூகத்தினரைப் போன்று வாழும் நிலைக்கு மாறிவருகின்றனர். இருப்பினும் தற்போதும் காட்டு வாழ்க்கைக்கே பழக்கப்பட்டவர்களாக வேடர்களாக வாழ்வோரும் உள்ளனர். இலங்கையின் தொன்மை மக்களான இவர்கள் ஆரியரின் வருகைக்கு முன்னரே, இலங்கையின் வரலாற்றுக் காலம் முதல் வசிப்பவர்கள் என்றும், இவர்கள் தென்னிந்திய பழங்குடி மரபினருடன் ஒத்த தன்மை கொண்டவர்கள் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (வில்ஹெய்ம் கெய்கர்) Morgan, Tylor, Rivers மற்றும் ஏனைய ஆரம்பகால மானிடவியலாளர்கள் தொன்மைமக்கள் என்போர் குறைந்த மக்கள் தொகையுடன் தொழிநுட்பத்திலும் சமூகத்திலும் எளிமையான தன்மையுடன் வாழ்ந்து வருகின்ற சமூகத்தினர் எனக் குறிப்பிடுகின்றனர்.

**இலங்கையில் வேடர்கள்:**

இலங்கையில் வேடர் சமூகத்தின் தொன்மை வரலாற்றுக்கு முற்பட்டதாகும். இலங்கையில் வாழும் இனங்களுள் தொன்மைக்குடிகளாக வேடர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் உலகத் தொன்மைமக்களுக்கு மத்தியில் முக்கிய இடம் வகிக்கின்றனர். இலங்கையின் தொன்மைக்குடியினர் பற்றிய ஆய்வுகள் பலராலும் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டின் பாரம்பரியங்களை எடுத்தியம்புகின்ற விடயங்களில் அந்நாட்டின் தொன்மைக்குடியினரின் பங்கு அதிகமானது. அதனால் நாட்டின் தொன்மைக்குடியினர் பற்றிய தேடலும் முக்கியமானது. ரொபர்ட் னொக்ஸினால் (Robert Knox) வெளியிடப்பட்ட ‘இலங்கைத் தீவின் ஒரு வரலாற்று உறவு’ (An Historical Relation of the Island of Ceylon, 1681) என்ற வரலாற்று நூலில் இலங்கை வேடர்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவர் இலங்கையின் முக்கியமானதொரு இனக்குழுமமாக வேடர்களை குறிப்பிடுகிறார்.

**வேடர் சமூகத்தின் நம்பிக்கைகளும் சடங்குகளும் வழிபாடும்:**

மனித மனநிலையின் விளைவுகளே சடங்கு, வழிபாடு, நம்பிக்கை, மந்திரம் போன்ற புனைவாக்கங்கள். இவை தம்முள் ஒன்றிணைந்து, உருப்பெற்று சடங்குகளாக, வழிபாட்டு மரபாக, சமயமாக தோற்றம் பெற்று வளர்ந்துள்ளன. இவற்றினடிப்படையில் வேடர்களின் தொன்மை மற்றும் அடையாளங்களை விளங்கிக் கொள்ள முடியும். வேடர் இன மக்களால் வழிவழியாக நம்பப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்ற நம்பிக்கைகளே அவர்களின் வாழ்வியல் நம்பிக்கைகளாகும். பெரும்பாலான நம்பிக்கைகள் அம்மக்களாலேயே உருவாக்கப்பட்டும் ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்கப்பட்டும் வந்திருக்கின்றன. முழுமையான நம்பிக்கை (Belief) என்ற நம்பிக்கையே வேடர் இன மக்களிடம் வேரூன்றிக் காணப்படுகிறது. இவை மரபின் அடையாளமாக, காரண காரியத்திற்கு இடம் கொடாமல் வழிவழியாகப் பின்பற்றப் பட்டு வருகின்றன. மனிதன் தாயின் வயிற்றில் கருவாக தோன்றியது முதல் இறப்பு வரையான பல்வேறு வகைப்பட்ட நம்பிக்கைகள். அம்மனிதன் இறந்தபின் அவன் ஆவியாக அலைகின்றானா, பேயாகத் திரிகின்றானா என்பது வரை, அனைத்து நிலைகளிலும், வேடர் மக்களிடம் நம்பிக்கைகள் நிறைந்துள்ளன. இந்நம்பிக்கைகளுக்குப் பின்னால் வலுவான உளவியல் (Psychological) காரணம் இருப்பதையும் அறிய முடிகிறது.

**சடங்குகள்:**

மனிதன் தோன்றிய அன்றே சடங்கும் தோற்றம் பெற்றுவிட்டது. சடங்கானது மனித மனத்தின் வெளிப்பாடாகும். தொடக்கக் கால இனக்குழுச் சமூகத்தில் (Primitive Society) சடங்குகளே வாழ்க்கையாகவும் வாழ்க்கையே சடங்குகளாகவும் இருந்தனை வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன. சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வரன்முறை ஆகும். தொன்மைக்குடியினரான வேடர்கள் வேட்டைக்குச் செல்லும் முன் வேட்டைச் சடங்கு நிகழ்த்திச் சென்றதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. இத்தகைய சடங்குகளே இனக்குழுச் சமூகத்தை இயக்கியதாகவும் நம்பப்படுகிறது. இந்நிலை இன்றும் தொடர்கிறது. இயற்கை விளைவுகளால் நன்மை ஏற்படும் பொழுது மகிழ்ச்சியடைந்த மனிதன் அதற்கு நன்றி செலுத்தும் பொருட்டும், பாதிப்பு அடையும் போது இயற்கையைத் திருப்திப்படுத்தும் வகையிலும், நம்பிக்கையின் அடிப்படையில் சில சடங்குகளை மேற்கொண்டான்.

**வழிபாடு:**

'வழிபடு' என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்னும் சொல். வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனை முறை என்று அகராதிகள் பொருள் தருகின்றன. தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும் பூசனை முறைகளுமே வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு என்றும் வழிபாடு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

**வேடர் சமூகத்தின் ஆரம்பகால நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள்:**

வேடர்களின் ஆரம்பகால வாழ்வியல் அம்சங்களை நோக்கும்போது அவர்கள் தாவரங்கள், உயிரற்ற பொருட்கள், உயிரினங்களுடனான இயற்கை நிகழ்வுகள், புழங்கு பொருட்கள் மற்றும் இறந்த தமது மூதாதையர் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தமை வெளிப்படுகிறது. இந்த நம்பிக்கைகளின் காரணமாக வழிபாடுகளும் சடங்குகளும் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றின் நீட்சியினை இன்று வரை அவர்களிடத்தில் காணமுடிகிறது. சிங்கள மொழி பேசும் வேடர்கள் தங்கள் முன்னோர்களை வழிபடுவது வேதா மதத்தின் அம்சங்களில் ஒன்றாக காணப்படுகிறது. முன்னோர்களை வேடர்கள் 'யாக்கா' என்று அழைக்கிறார்கள். வேடர்கள் வேட்டையாடும் போது அவர்களது முன்னோர்களை அழைக்கிறார்கள். மலை யாக்கா (மத சடங்குகளில் மலைப்பாறை அல்லது பாறை போன்ற கடவுள்கள்) ஆரம்பகால வேடர்களுக்கு தனித்துவமானது. வேதங்களின் படி, கதிர்காமத்தில் உள்ள கோவில் வளாகம், இந்துக் கடவுளான முருகன் அல்லது ஸ்கந்தாவின் மூதாதையர் என்று தொன்மைக்குடியினரால் நம்பப்படும் இலங்கையைச் சேர்ந்த சுதேசிய பெண்ணான வள்ளியை சந்தித்து திருமணம் செய்து கொண்டார். இது தவிர, வேடர்கள் மற்றும் பிற சமூகங்களுக்கு புனிதமான பல வழிபாட்டுத் தலங்கள் இலங்கை முழுவதும் காணப்படுகின்றன. அவற்றில் முருக வழிபாட்டோடு தொடர்புபட்ட பல்வேறு பெயர்கள் கொண்டு முருகனை வழிபடுகின்ற கோயில்களில் அதிகமானவற்றில் வேடர்களின் தொடர்பு உள்ளன. மட்டக்களப்பில் காணப்படுகின்ற ஆலய நடைமுறைகளிலும் வழிபாட்டுத் தன்மையிலும் வேடர்களின் வழக்காறுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், கோவில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், சித்தாண்டி, கோவில்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம், மண்டூர் ஆலயம்

போன்ற மட்டக்களப்பின் புகழ்பெற்ற திருத்தலங்களினதும் வரலாற்றுத் தொடக்கநிலை வேடர்களைக் கொண்டு முன்னெடுக்கப்படுவது கவனத்திற்குரியதாகும். வேடர்கள் இலிங்கம், வேல் வைத்து வழிபட்டதாக ஐதீகம் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரர், மண்டூர் கந்தசுவாமி ஆலயம், சித்தாண்டி முருகன் ஆலயம், பழுகாம் விஷ்ணு ஆலயம் போன்றவற்றில் வேடர்களுக்கென்று வேட்டைத் திருவிழா, பூஜைகள் இடம்பெறுகின்றன. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயத்தில் இடம்பெறும் கஞ்சிமுட்டி வழங்கும் நிகழ்வில் வேடர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். வேடர்களையும் குமார தெய்வத்தையும் தொடர்பு படுத்துவதாக சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலில் மயில் கட்டு திருவிழா பன்னிரெண்டாம் நாள் திருவிழாவாக இடம்பெறுகின்றது. இதன்போது கோராவெளி, தரவைப்பகுதிகளில் வாழும் வேட குலத்தவர்கள் வாழைக்குலைகள், தேன், பச்சையரிசி, காய்கறிகள், மயிலிறகுக் கட்டுக்களையும் கொண்டுவருவர். மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் சுவாமி வீதி வலம் வரும் நிகழ்வின்போது வேடர் ஒருவர் கையில் வில்லம்பு ஏந்தியவாறு சுற்றுமுற்றும் பார்த்தவண்ணம் முன்னால் வருவார். மட்டக்களப்பு திராய்மடு வீரபத்தினியம்மன் ஆலயத்தின் பூசைகள், மந்திரங்கள் என்பன வேட முறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வேட குல வழிபாடாக குமார தெய்வ வழிபாடு நீண்ட காலமாக இடம்பெற்றிருக்கின்றமையை ஆய்வுகளினூடாக அறியமுடிகிறது.

மட்டக்களப்பின் பல இடங்களிலும் பரந்து வாழும் வேடர் சமூகத்திலிருந்து வேறுபட்டவர்களாக வாகரை வேடர்கள் காணப்படுகிறார்கள். அவர்களது சடங்குகள் மற்றும் வழிபாடுகள் உள்ளிட்ட வாழ்வியல் அம்சங்கள் வேறுபட்டு காணப்படுகின்றன. மட்டக்களப்பு வேடர் சமூகத்தின் வழிபாட்டு நீட்சியாக குமார வழிபாட்டை குறிப்பிடுகின்றனர். இது மட்டக்களப்பின் சில இடங்களில் பெருந்தெய்வ வழிபாடாகவும், ஆகம முறைப்பட்ட வழிபாட்டுச் சடங்குகளாகவும் காணப்படுகின்றதனை அவதானிக்க முடிகிறது. ஆனால் வாகரையில் உள்ள வேடர்களின் வழிபாடும் அதனோடிணைந்த சடங்குகளும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளாக காணப்படுகின்றன. வாகரை வேடர்களின் சடங்கு மற்றும் வழிபாட்டு முறைகள் வேடர் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களை அதிகமாக கொண்டுள்ளதையும் வேடர்களின் நீட்சியையும் அவர்களிடமே காணமுடிகிறது. ஆகவே வாகரை வேடர் சமூகத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு வேடர் சமூக சடங்குகளும் வழிபாட்டு முறைமைகளும் கலந்தாராயப்படுகின்றன.

**வேடர் சமூகத்தில் காணப்படுகின்ற சடங்குகள், வழிபாடுகளின் நீட்சியும் மாற்றமும்:**

வேடர் சமூகத்தின் சடங்குகள், வழிபாடுகளின் நிலை எவ்வகையானவை என நோக்கும்போது வேடர்களது சடங்குமுறைகள் தனித்துவம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. இவர்கள் சடங்கு என்பதை 'உதேயான' என்ற சொல்லால் அழைக்கின்றனர். அவர்களது இன்றைய சடங்கு முறைகளை அவதானித்தபோது அவற்றினை வழிபாட்டுச் சடங்குகள், வாழ்வியல் சடங்குகள் என இரு வகைப்படுத்திப் பார்க்க முடிகிறது. ஆரம்ப காலங்களைப் போன்று இன்றைய சூழலில் வேடர்களின் வழிபாட்டு நடைமுறைகள் காணப்படவில்லை என்பதை தற்காலத்தில் வேடர் வழிபாட்டில் ஈடுபடுபவர்களிடம் திரட்டிய தகவல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. இச்சடங்குகள் குறித்து அச்சமூக மூதாட்டியொருவர் குறிப்பிடும்போது, 'எங்கட எந்தச்சடங்கெண்டாலும் எங்கட முன்னையவங்க செய்தமாதிரிதான் நாங்களும் செய்து வாறம். இந்த நாட்டுப்பிரச்சனையாள காட்டுக்குள்ள போகயும் ஏலா வரயும் ஏலா. பெரிய கக்கிசம். அதால ஊருக்கதான் எல்லாம் செய்யிறம். அதால எல்லாமே கொஞ்சம் கொஞ்சம் மாறிப்போச்சி. எப்பிடியாவது எங்கட முன்னையவங்க செய்தமாதிரி ஓரளவு செய்யிறம். இப்படிச் செய்யிறதாலதான் எங்கட சனசந்தி எல்லாம் ஓரளவு சேருது' எனக்கூறினார். அவரது கருத்தினூடாக இன்றைய வேடர் சமூகத்தின் சடங்குகள் மற்றும் வழிபாடுகள் மாற்றம் கண்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

**வழிபாட்டுச் சடங்குகள்:**

இவர்களின் வழிபாட்டுச் சடங்குகளின் போது அவர்களது மூதாதையர்களை நினைவுகூர்ந்து முதல்மரியாதை செய்த பின்பே ஏனைய தெய்வங்களை அழைத்து வழிபடுகின்றனர். வழிபாட்டுச் சடங்குகளில் முக்கியமாக இருவகையிலான சடங்குகளை இவர்களிடத்தில் அவதானிக்க முடிந்தது. அவை, தெய்வ வழிபாட்டுச்சடங்கு, மூதாதையர் வழிபாட்டுச் சடங்கு என்பவையாகும். இயற்கையோடு இணைந்து வாழப்பழகிப்போன இவர்கள், இயற்கையையே தங்கள் தெய்வமாக வழிபட்டு வந்துள்ளனர். தங்கள் தெய்வங்களுக்கு காட்டில் கிடைக்கும் காய்கள், கனிகள், தூப வகைகள், தீபங்கள், பூக்கள் என்பவற்றை பயன்படுத்தி வந்துள்ளனர். தமது பாரம்பரிய ஆயுதங்களான ஈட்டி, வில், அம்பு முதலியவற்றுக்கு வழிபாடுகளின் போது மரியாதையை செலுத்திவருகின்றனர். வேடர் சடங்குகளில் 'பாட்டுக்காரர் கொட்டு' எனப்படும் வாத்தியங்கள் வாசிக்கும் பறைக்காரன், கபுறான என்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இவர்களது சடங்குகளின்போது

மூதாதையர்களுக்கு முதல் மரியாதை செய்யப்பட்ட பின்னைரே தெய்வங்களை அழைத்து வழிபடுகின்றனர். ஊத்தியாக்களான மூதாதையர்களுடன் கரடித் தெய்வம், மாறாத்தெய்வம் முதலியன இவர்களின் முக்கிய தெய்வங்களாகும். அத்தோடு மா தெடுத்தன், பாலைக்கா தெவுத்தன், குருணாகல தெவுத்தன், கடல் பகுதித்தெய்வம், குடா நீலி, மாதெலிக்காயே, வட்ட முகரி, கப்பல் தெய்வம், குறுமுந்தன, மாறா தெய்வம், கரை தெய்யா, கிரி அம்மா, பத்தினி தெய்யோ, குமாரர், கன்னிமார் மற்றும் பின்னைய கால இடைச்சேர்கைகளாக வந்து கெங்கை காளி, கெங்கை வைரவர், சுடலை வைரவர், மயானருத்ரர், காட்டேரி, சுடலைமாடன் முதலான தெய்வங்களுக்கான வணக்க முறைகளும், வழிபாட்டு ஆசாரங்களுமே காணப்படுகின்றன. இவர்களின் நம்பிக்கையில் காகம் கரைதல், கிளி தலை கீழாக தொங்குதல், பறவைகள் ஒலியெழுப்புதல், தும்மல், நாய்கள் பதறிப்போய் குரைத்தல், மனைவியின் பொட்டு அழிதல் போன்ற சம்பவங்கள் நிகழும் போது தாம் நினைத்தவைகள் நடைபெறாது என்ற நம்பிக்கை உள்ளது.

**மூதாதையர் வழிபாடு** (Ancestor Worship):

வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த தனது முன்னோர்களையும் தாய், தந்தையரையும் போற்றும் வகையில் மனிதன் அவர்களைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினான். இதனால் முன்னோர்கள் நன்மைகளைச் செய்து காப்பதாகவும் நம்பினான். இதன் விளைவாகத் தோன்றியதே முன்னோர் வழிபாடு. முன்னோர் வழிபாட்டிற்கு ஆவி பற்றிய நம்பிக்கையே அடிப்படை என்று அறியமுடிகிறது. வேடர்கள் இறந்தவர்களின் நம்பிக்கையை நம்பினர். நாயக்கர், பிலிந்த யக்கா (மூதாதையர் ஆவி) மற்றும் மலை யக்காவை வழிபடுவதும் மயக்குவதும் இந்த நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். தம்பானாவின் வேடர்கள் மட்டுமே இப்போது கிரிகொரஹா என்று அழைக்கப்படும் நடன சடங்கைப் பின்பற்றுகிறார்கள். வேடர்களின் கூற்றுப்படி, அவர்களது முன்னோர்களின் ஆன்மா சாந்தியடையாவிட்டால், ஆவிகள் அவர்களை வேட்டையாடி, தங்களுக்குக்கு பேரழிவையும் நோயையும் கொண்டு வரும் என்ற நம்பிக்கை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். அதனால் வேடுவர்களின் வழிபாட்டுச் சடங்குகளிலே முதலாவதாக வழிபாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுவது உத்தியாக்கள் மூதாதையர் வழிபாடு ஆகும். மூதாதையரை உத்தியாக்கள், ஆசுவாதிகள் என்றும் அழைக்கின்றனர். பனுவள சீயா (ஒரு கட்டாடி) பனிக்கர், களுவர், குடல்புரி ஆச்சி, ரெட்டையர், பால்குடியா, சியா, முடமாரி, களுக்கொட்டா, இங்குலு கொட்டா, உக்குளுமா சியா என சில மூதாதையர்களின் பெயர்களைக் கூறினார்கள்.

வேடர்களுடைய சடங்காற்றுகையின் போது உத்தியாக்கள் (மூதாதையர்) வழிபாடொன்றின் சடங்கு நடவடிக்கைகள் செவ்வனே ஆரம்பமாகி உத்தியாக்களின் வழிபாட்டின் அரையிறுதியில் இருந்து பக்தர்களின் வேண்டுகோளிற்கான, காத்திருப்புக்கான நேரம் வந்தது. அங்கு சிலர், பல பொருட்கள் தாங்கிய ஓலைப்பெட்டியுடன் (பழவகைகள், உணவுப் பண்டங்கள், மற்றும் சில பொருட்களுடன்) காத்துக் கிடந்தனர். அதில் ஒரு சிலரே ஆண்கள். அவர்களின் இருப்பிடம் நோக்கி உருவாடுகின்ற தேவாதி (கலையாடுபவர்) அழைத்துச் செல்லப்பட்டு, அவர் கொட்டு வாத்திய ஒலி மற்றும் பாடல்களின் மூலம் உருவேற்றப்படுகின்றார். இவ்வாறான தன்மை கொண்டதாகவே சிங்களப் பகுதிகளில் வாழ்கின்ற வேடர்களின் மூதாதையர் வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன. இவர்கள் தமது மூதாதையினரையே தமக்கான ஆதாரமாக, பாதுகாப்புக் கட்டமைப்பாக நினைத்துக் கொள்கின்றார்கள். இவர்கள் தமது இறந்த முன்னோர்களின் ஆவியினை வழிபாடு செய்து அவர்களினைக் கௌரவப்படுத்தா விடின், தமது உறவுகளில் யாருக்காவது நோய் பிணிகள் வந்து விடும் எனவும், தமது வேட்டைகளில் பிரச்சினைகள், இடையூறுகள் ஏற்பட்டு விடும் எனவும் அச்சம் கொள்கின்றனர். வழிபாட்டுச் சடங்குகள் குறித்து அச்சமூக முதியவரான செல்லையா என்பவர் கூறும்போது, 'இப்பிரதேச வேடர்களின் பிரதான வழிபாட்டு முறையாக மூதாதையர் வழிபாடு அமைந்துள்ளது. இறந்துவிட்ட எமது மூதாதையர்களை நாம் உத்தியாக்கள் என அழைக்கிறோம். எமது மொழியில் இவர்களை 'நேயக்கு' என்றும் அழைக்கிறோம்' என்றார். அவர்களது தெய்வங்களைப்பற்றி வேடுவத்தலைவர் வேலாயுதம் அவர்கள் கூறும்போது, 'எமது குலதெய்வமான பெரியசாமி வழிபாடு முக்கியமானதாகும். அதேபோல கரடித்தெய்வம், மாறாத்தெய்வம் முதலியன எமது முக்கியமான தெய்வங்களாகும். பொதுவான எமது தெய்வங்களாக கப்பல் தெய்வம், பறங்கிநாச்சி, பட்டானி, பாலாபாலி போன்றவை உள்ளன. ஆண்தெய்வ பெண்தெய்வ வழிபாடுகள் எங்களிடம் உள்ளன. பெண்தெய்வங்களாக – மோட்டுக்காட்டுத்தெய்வம், கிரியம்மா, இந்திகொல்லி, வொம்வொன்ன, கினிகந்த என்பவையும், ஆண்தெய்வங்களாக – மல்லலி பண்டார, மடலி பண்டார, கெவுங்கொல்ல, லிம்பங்கொடி பண்டார, ரம்குப்பி பண்டார என்பவையும் உள்ளன' என விபரித்தார்.

வேடர்களது கோயில்களில் வருடாந்த உற்சவம் நடத்தப்படுகின்றது. அவர்களது வழிபாட்டில் 'பாட்டுக்காரன் கொட்டு' என்ற தோல்வாத்தியம் முக்கியம் பெறுவதனை காணமுடிந்தது. அவர்களது சடங்குகளிலே இவ்வாத்தியம் வாசிக்கும் பறைக்காரன், கபுறாளை எனப்படும் தெய்வக்காரன் ஆகியோர் முக்கியம் பெறுகின்றதனை கள

ஆய்வின்போது அவதானிக்க முடிந்தது. கொட்டு என்ற வாத்திய இசையுடன் வேடர் மொழிப்பாடல் பாடப்பட தெய்வக்காரன் தனது தலையில் சீலை கட்டி தென்னங் குருத்தினால் பின்னப்பட்ட சட்டை போட்டு, தமது தொழிலில் பயன்படுத்தும் ஈட்டி, அம்பு, வில் போன்ற ஆயுதங்களை கையிலேந்தி ஆடினர். அவர்களது மூதாதையர் வழிபாட்டின்போது பின்வரும் பாடலைப் பாடி உத்தியாக்களை அழைத்து வழிபட்டார்கள்.

*‘இந்தா பெடியப்பா வடபலவலோ*

*நொதியம்பலோ ஆயியே*

*நாயோ நாகனம்மாயா*

*கன்டா பெடியாப்பா கமகமளு பனுவனளு ஏக்*

*மந்த்ரயே ரயனமோ ரயனமல்*

*ஏ கமந்த் வெல்லாயன் வெல்லம்பாளன் வெரிகடிகத்தோ*

*உஸட சாயனட உன்னும் பாணன்*

*கட்டாங்கரியோ ஓ கமர்தரயோ…….’*

அவர்களது கோயிலுக்குள் களிமண்ணால் செய்யப்பட்ட தெய்வச்சிலைகள் காணப்படுகின்றன. அத்தெய்வங்களுக்கான வழிபாட்டு சடங்குகளில் அவர்களது பாரம்பரியத்தின்படி கபுறாளை முக்கியத்துவப்படுத்தப்படுகின்றார். அங்கு மாரியன், வேலன், குமாரசாமி, அந்தன், கந்தவனம் ஆகிய கபுறாளைகள் காணப்பட்டனர். தமது தொழிலுக்காக பயன்படுத்தும் ஈட்டி, அம்பு, வில் மற்றும் காட்டில் கிடைக்கும் காய் கனிகள், பூக்கள், இலைகள் போன்றவற்றை வழிபாட்டு சடங்குகளில் பயன்படுத்துகின்றதனை அவதானிக்க முடிந்தது. வாகரை குஞ்சன்குளத்தில் அமைந்துள்ள அவர்களது கோயிலுக்குள் பெண்தெய்வச்சிலை காணப்படுகிறது. அதுவே பிரதானமான சிலையாகவும் காணப்பட்டது. இது வாகரை வேடர்கள் மத்தியில் பெண் தெய்வங்களும் முக்கியத்துவம் பெறுவதனை உணர்த்துகிறது.

**வாழ்வியல் சடங்குகள்:**

வேடர்கள் வாழ்வியல் சடங்குகளை ‘வாழ்க்கை உதேயான’ என்று அழைக்கின்றனர். அவர்களது இவ்வாறான வாழ்வியற் சடங்குகளினை அவதானித்தபோது அவை மனிதரின் பிறப்பு முதல் இறப்பு வரையான காலப்பகுதிகளுக்குள் இடம்பெறுகின்ற

சடங்குகளே ஆகும். எனவே இவை 'வாழ்க்கை வட்டச் சடங்குகள்' ஆகும். அவற்றில் முக்கியமானவையாக பின்வருவனவற்றை கூறலாம், பருவமடைதல் சடங்கு, திருமணச்சடங்கு, மரணச்சடங்கு.

**பருவமடைதல் சடங்கு:**

பருவமடைதலை இன்றைய வேடர்கள் 'பெரிய புள்ளையாதல்' என கூறுகின்றனர். இது பற்றி மூதாட்டியான கதிரமலை என்பவர் கூறும்போது 'எங்கட புள்ளொண்டு பெரிசானா மற்றாக்களிட்ட இருந்து ஒதுக்கி வைக்கிறம். அதுக்கெண்டு தனிய புதுக்குடில் ஒன்று கட்டி 14 நாளைக்கு தனியாக வைக்கிறம். புள்ளைக்கு அதிது செய்ய, குடுக்க எடுக்க என்னப்போல வயதான ஒராள் இரிக்கும். புறகு தண்ணி வாப்பம். தண்ணிவாத்த புறகு அந்தப்புள்ளைய கொழுவிச்சி அந்தக் குடில பத்தவைச்சுப்போடுவம்' என்றார். அவரது கருத்தினூடாக பூப்படையும் பெண்பிள்ளைகளுக்கு செய்யப்படும் சடங்குமுறைகள் வெளிப்பட்டன.

**திருமணச்சடங்கு:**

வேடர் சமூகத்தில் திருமணம் என்பது எளிமையான ஒரு சடங்காகும். விழாவின் போது, மணமகள் மணமகனின் இடுப்பில் ஒரு முறுக்கப்பட்ட கயிற்றை கட்டுகிறார். இதன்மூலம் மணமகள் மணமகனைத் தன் வாழ்க்கைத் துணையாகவும், துணையாகவும் ஏற்றுக்கொள்கிறாள். சமீபகாலம் வரை, சமூகத்தில் உறவினர்களுக்கு இடையேயான திருமணம் சாதாரணமாக இருந்தது. இப்போது, வேடர் சமூகப் பெண்கள் சிங்கள மற்றும் தமிழரை திருமணம் செய்கிறார்கள். கணவன் இறந்த பிறகு விதவைகள் தமது ஆதரவிற்காகவும் ஆறுதலுக்காகவும் தங்கள் கணவரின் சகோதரர்களை திருமணம் செய்து கொள்கிறார்கள். அவர்களது திருமண முறை பற்றி கதிரமலை என்ற பெண் குறிப்பிடும்போது, 'என்ர புள்ளைய என்ர அண்ணன்ட இல்லாட்டி தம்பிட பொடியன்தான் கட்டுவான். இது வழமை. அதுக்காக எல்லாரும் அப்பிடி கட்டல. எங்கட வறுகைக்குள்ளதான் கட்டுற. பொம்புள புள்ளட வீட்டதான் கல்யாணம் செய்யிற வழமை. பொடியன் புள்ளக்கி பொட்டு வைப்பான். புள்ளட கையப்பிடிச்சி அவனிட்ட குடுப்பம். இப்பிடி முடிஞ்ச புறகு புள்ளட சனசந்தி எல்லாம் பொடியனுக்கு ஈட்டி, வில், அம்பு, குடுப்பம். சிலாக்கள் வேட்டநாயும் குடுப்பாங்க. இப்ப அதெல்லாம் மாறித்து' எனக் கூறினார்.

**மரணச்சடங்கு:**

ஒரு சமூக உறுப்பினர் இறந்த பிறகு, அவர்கள் உடனடியாக பெரிய சடங்குகள் அல்லது சடங்குகள் இல்லாமல் அடக்கம் செய்யப்படுவார்கள். முன்னதாக, வேடர்கள் உடலை அடக்கம் செய்வதற்கு முன்பு கடும்பா மரத்தில் இருந்து அகற்றப்பட்ட தண்டுகளில் உடல்களை புதைத்தனர். காலனித்துவவாதிகள் அவர்களின் நிலத்தை கைப்பற்றியதால், வேடர்கள் அவர்களின் கல்லறைகளில் சிறிய மாற்றங்களைச் செய்தனர். நான்கு முதல் ஐந்து அடி ஆழத்தில் ஒரு கல்லறை தோண்டி, துணியால் சுற்றப்பட்ட உடலை கீழே இறக்கி, மண் மற்றும் இலைகளால் மூடுவார்கள். கல்லறையின் தலையில் மூன்று திறந்த தேங்காய் மற்றும் ஒரு மர சுத்தியல் வைக்கப்படுகிறது. சமாதியின் அடிவாரத்தில் திறந்த தேங்காய் மற்றும் உடைக்கப்படாத தேங்காய் வைக்கப்படும். சில கற்றாழை இனங்கள் கல்லறையின் தலை, நடு மற்றும் பாதத்தில் நடப்படுகின்றன. இறந்தவரின் தனிப்பட்ட உடைமைகளான வில், அம்பு, வெற்றிலை பாக்கு போன்றவையும் அவர்களுடன் புதைக்கப்படுகின்றன. வேடர்கள் இறந்தவர்களின் வழிபாட்டை கடைபிடிக்கின்றனர். அவர்கள் தங்கள் நாயே யக்காவிற்கு (உறவினர் ஆவி) வழிபாடு செய்து மந்திரங்களைச் உச்சரிக்கிறார்கள், மரணச்சடங்கு பற்றி கைலாயன் எனபவர் கூறும்போது, 'ஓராள் செத்தா மரப்பட்டையால அந்த சவத்த மூடி கொடிகளால சுத்திக்கட்டி நிலத்தில மடுதோண்டி அதுக்குள்ள சவத்த வைச்சி மண்ணால மூடுவம். அந்த மடுவுக்குள்ள அவங்கட உடுப்புக்கிடுப்பு எல்லாத்தையும் போட்டு மூடுவம். அதுதான் வழம. ஏனென்டா அந்தாள் திரும்பயும் புறக்கும் எண்ட நம்பிக்கதான் எங்களுக்கு. மூன்டாம் நாள் ஏழாம் நாள் முப்பொத்தொண்டு எல்லாம் வீட்டில செய்வம். அதுக்குப்புறகு அந்தாள் எங்கட நேயக்குதான்' என்று கூறினார்.

**முடிவுரை:**

வாகரை வேடர் சமூகத்தின் அனைத்து வாழ்வியல் கூறுகளிலும் அவர்களது மூதாதையர்களின் பாரம்பரிய சம்பிரதாயங்களின் நீட்சியை காணமுடிகிறது. இன்றைய காலத்தில் வாகரையில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேடர் சமூகத்தின் மக்களிடம் அவர்களது மூதாதையர்களின் வாழ்வியல் கூறுகளை தொடர்ச்சியாக தாம் பேண வேண்டும் என்ற எண்ணம் காணப்படுகிறது. இருந்தபோதிலும் கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசின் குடியேற்றங்கள், குடியேற்றங்களின் காரணமாக ஏற்பட்ட தாக்கங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், உள்நாட்டுப்போர், அதனால் ஏற்பட்ட தாக்கங்கள், வேடர்களின் இடப்பெயர்வுகள், ஏனைய சமூகத்தவருடனான

ஊடாட்டங்கள், பொருளாதார சிக்கல்கள, காலமாற்றம் போன்றவற்றின் காரணமாக அவர்களது வாழ்வியல் கூறுகளை முழுமையாகப் பின்தொடர முடியாத சூழல் காணப்படுகின்றன. அவை வேடர் சமூகத்தின் வாழ்வியல் கூறுகளில் முக்கியமானவையாகக் காணப்படும் சடங்குகள் வழிபாடுகள் என்பவற்றிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. இலங்கையின் தொன்மை மக்களான வாகரை வேடர் சமூகத்தின் ஆரம்பகால சடங்குகள், வழிபாடுகள் பற்றிய எமது இந்த ஆய்வினூடாக அவர்களது இந்த வாழ்வியல் கூறுகள் மாற்றமுற்று காணப்படுகின்றமை வெளிப்பட்டுள்ளது.

**உசாத்துணை:**


- Ashcroft et al. (2000). *Post - Colonial Studies: The key concepts.* New York.
- Brow, James. (1978). *Veddha Villages of Anuradhapura: The Historical Anthropology of Community in Sri Lanka*. Seattle: University of Washington Press.
- Dart, Jon. (1990). *The coast Veddas: dimensions of marginality in Dharmadasa and Samarasinghe* (eds.). Colombo: ICES
- David, Blundell. (2013). *Revisiting Cultural Heritage in Sri Lanka: The Vedda (Vanniyaletto) Monica*. USA.
- Deraniyagala, P. E. P. (1963). *The hybridization of the Veddas with the Sinhalese.* Spolia Zelanica.
- Deraniyagala, S. U. (1992). *The Prehistory of Sri Lanka: An Ecological Perspective. Memoir Volume 8, Part I-II.* Department of Archaeological Survey, Sri Lanka.
- Dharmadasa, K.N.O., Samarasinghe. (1990). *The Vanishing Aborigine.* Colombo: ICES.
- Knox, Robert. (1681). *An Historical Relation of the Island of Ceylon.* Glasgow: James MacLehose & Sons.
- Lanka, Ranawera. (2015). *A Case Report: the Coastal Vedda Community Trapped in the Civil War in Sri Lanka.* Faculty of Medicine, University of Kelaniya Sri Lanka, ww.researchgate.net
- ….., *Mahavamsa.* (1950). [1912] version by Geiger-Bode. Colombo, Government Information Department,
- Premakumara De, Silva., Asitha G, Punchihewa. (2011). *Socio- Anthropological Research Project on Vedda Community in Sri Lanka.* Ministry of Culture and the Arts Government of Sri Lanka.
- Sanmugalingan, N. (2001). *Cult of Murugan in Eastern Sri Lanka.* Nagalingam Noolalayam, Jaffna.
- Seligmann, C. G., Brenda Z, Seligmann. (1911). *The Veddas.* Cambridge: Cambridg University Press.
- Tylor, E.B. (1974). First Published in 1871. *Primitive Culture; Researches into the Development of Mythology, Philosophy, Religion, Art and Custom.* New York: Gordon Press,
- Virchow, Rudolph. (1881). *The Veddhas of Ceylon and their relation to the neighboring tribes*. The Journal of the Ceylon branch of the Royal Asiatic Society.
- Wiveca, Stegeborn. (1977). *Indigenous People, Nature Conservation and Human Rights Case study of Sri Lanka*. www.ijsrp.org/research.
- பக்தவத்சல, பாரதி. (2018). *தமிழகப் பழங்குடிகள்.* அடையாளம் பதிப்பகம்: இந்தியா.